**09.09.2020**

## பத்திரிக்கைச் செய்தி

விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை வரை செல்லும் நீல வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் (07.09.2020) முதல் துவங்கியது. இதனைத் தொடர்ந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ செல்லும் பச்சை வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவைகள் இன்று (09.09.2020) புதன்கிழமை காலை 07.00 மணி முதல் துவங்கியது.

பொதுமக்கள், மெட்ரோ பயணிகள் மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு பயணிகளின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு மெட்ரோ இரயில் சேவைகள் நாளை 10.09.2020 (வியாழக்கிழமை) முதல் தினந்தோறும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும். உச்ச நேரங்களில் (Peak Hours) (காலை: 08.30 மணி முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ செல்லும் மெட்ரோ இரயில் சேவைகள் நாளை 10.09.2020 (வியாழக்கிழமை) முதல் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி தனிமனித இடைவெளியை கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.